கனிம மாவட்ட முதலமை மற்றும் அமலு நீதிபதி அவர்கள், மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318786

1. District : இராமநாதபுரம் PS: தனி.க மரைவு Year: 2025 FIR No.: 21/2025 Date: 19.11.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: கனிமம் கடத்தல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7(b)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.11.2025 Date to : மதியம் 2 மணி
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.11.2025 Time : காலை 8 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) தொகுதி-II Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலம் 21/2025 19.11.2025
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ / ~~மின்னணு வடிவம்~~

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : பரமக்குடி தாலுகா அலுவலகம் அருகில்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : 2 மணி
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. மலைராஜ் (b) Father's/ Husband's Name : பொக்கரே.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 58/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No.:
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் (g) Address : 3/3, அரசு காலனி, சித்தகோட்டை
தொழில் முகவரி பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தி.ரு.முகமது உதுமான் ராஜா, சித்தகோட்டை கிராம நிர்வாக அலுவலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

58/2025

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன்., காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு. இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 19.11.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி P.மலைராஜ் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா. சித்தனேந்தல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திருமுகமது உதுமான் ராஜா ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.21/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 19.11.2025 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. மலைராஜ்

19/11/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.11.2025 காலை 10.05 மணி

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஊ.த.க. பிரிவு
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 21/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

அனுப்புநர் P.மலைராஜ், வயது 58/2025, த/பெ பொக்காரு, 3/3, அரிசன காலனி, சித்தனேந்தல், பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் - 623705. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் எனது சொந்த ஊரில் விவசாயம் செய்து வருகிறேன். எனது தகப்பனாருக்கு சொந்தமான பட்டா எண். 102ல் புதிய சர்வே எண்.109/26ல் 782 சதுரஅடி அளவுள்ள காலி மனையிடத்தை கடந்த 2003 ஆம் ஆண்டு எனது தகப்பனார் எனக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார். மேற்படி இடத்திற்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ய வேண்டியும், எனது தந்தையின் பெயரில் அரசு கொடுத்த இலவச இடத்தை எனது மற்றும் எனது தம்பி பெயரில் பட்டா மாற்றம் செய்ய வேண்டியும் கடந்த 10 நாட்களுக்கு முன்பு சித்தனேந்தல் கிராம நிர்வாக அதிகாரியை பரமக்குடி தாலுகா அலுவலகத்திற்கு அருகில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது எனது தகப்பனார் எனக்கு இனாமாக கொடுத்த இடத்திற்கான பட்டா பெயர் மாற்றம் செய்யவும். புதிதாக பட்டா வேண்டிய சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஜெராக்ஸ் எடுத்து கொடுங்க நானே ஆன்லைனில் விண்ணப்பம் செய்து பட்டா வாங்கி தருகிறேன் எனச்சொன்னார். நான் ஏற்கனவே உங்களிடம் இரண்டு முறை கொடுத்தேனே எனச்சொன்னதற்கு அதெல்லாம் இப்ப என்கிட்ட இல்லை புதுசா ஒரு செட் கொடுங்க எனச்சொன்னார். உடனே நான் சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஜெராக்ஸ் எடுத்து அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் இரண்டையும் சேர்த்து செய்து கொடுக்க ரூ.40,000/- வரை செலவாகும் எனச்சொன்னார். அப்போது நான் அவரிடம், ஐயா நான் இரண்டு

வருசமா அலையிறேன் ஏகப்பட்ட மனு கொடுத்தாச்சு இதுவரைக்கும் பட்டா மாறல இப்ப ரூ.40,000/- கேட்கிறீங்க என்னால எப்படி கொடுக்க முடியும். இப்ப கூட ஆறு மாதத்திற்கு முன்பு முதலமைச்சர் முகாமில் மனு கொடுத்தேன் அது என்னாச்சுனே தெரியல எனச்சொன்னதற்கு அதற்கு அவர், எங்கே மனு கொடுத்தாலும் கடைசியில எங்ககிட்ட தான் வரும் எங்களை கவனிக்காம வேலை நடக்காது அதனால் ரூ.30,000/- மாவது கொடுங்க எனச்சொன்னார். அதன்பிறகு நான் 11.11.2025 ஆம் தேதி மீண்டும் அவரை பரமக்குடி அலுவலகத்திற்கு சென்று விபரம் கேட்ட போது இப்ப போங்க நான் போனில பேசுறேன் என சொன்னாரு. பின்னர் நேற்று 18.11.2025ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் காட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் போது வீட்டிலிருந்த எனது செல்போனுக்கு (8489835602) விஏஓ 6381295304 என்ற எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு எனது மனைவியிடம் பட்டா ரெடியாயிருச்சு அவரை ரூ.2,500/- கொண்டு வர சொல்லுங்க என தகவல் கூறியதை தொடர்ந்து அன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் சித்தனேந்தல் கிராம விஏஓ முகமது உதுமான் ராஜாவிடம் நான் போன் செய்து பட்டா பெயர் மாற்றம் பற்றி கேட்ட போது, அதற்கு அவர் ரூ.2,500/- கொண்டு வந்துருங்க உங்க பேருல உள்ள இடத்துக்கு பட்டாவை மாத்திட்டேன் எனச்சொன்னார். அதற்கு நான் நிலத்துப் பட்டா பத்தி கேட்டதற்கு, அதற்கு அவர் அந்த இடத்திற்கு வேலை நிறையா இருக்கு இப்போதைக்கு ரூ.2,500/- கொண்டுகிட்டு நாளைக்கு காலையில 10 மணிக்கு மேல வாங்க எனக்கூறினார். பின்னர் சற்று நேரம் கழித்து அவரை மீண்டும் தொடர்பு கொண்டு பணமெல்லாம் கொடுக்க வழியில்லை எனச் சொன்னதற்கு அதெல்லாம் முடியாது பணத்துடன் நேரில் வாங்க பேசிக்கலாம் எனச் சொன்னாரு. அதன்பின்பு யோசித்து பார்த்து பட்டா பெயர் மாற்றம் செய்து தருவதற்கு என்னிடம் ரூ.2,500/- லஞ்சப்பணம் கேட்ட சித்தனேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு. முகமது உதுமான் ராஜா என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். மேலும் விஏஓ என்னிடம் தொலைபேசில் பேசிய உரையாடலை செல்போனில் பதிவு செய்து வைத்துள்ளேன். ஆகவே, என்னிடம்

லஞ்சப்பணம் ரூ.2,500/- கேட்ட சித்தனேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு. முகமது உதுமான் ராஜா என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) P.மலைராஜ். அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 19.11.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து காலை 08.30 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.21/2025 u/s 7 (b) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

19/11/2025

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM